முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 03.11.2025

E.A 2/2025 in

E.P No.14/2022

வா.சா. 1 - பிரியதர்ஷினி

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

குறுக்கு விசாரணை

நான் 08.08.2025ம் தேதி முதல் நாகர்கோவில் மாநகராட்சியில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நிறைவேற்று மனுவில் உள்ள பட்டிகை சொத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 1 முறை பார்த்தேன். சொத்தின் எல்கைகள் தெரியும். கிழக்கே ரோடும் வடக்கே காவல் நிலையமும் மேற்கும் தெற்கும் மாநகராட்சியின் அலுவலகம் உள்ளது. மேற்கு வடக்கு தெற்கு எல்லையை பிரிக்க காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் உள்ளது. அந்த காம்பவுண்ட் சுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு யாரால் கட்டப்பட்டது என்றால் தெரியாது.

காம்பவுண்ட் சுவரை பஞ்சாயத்தால் கட்டப்பட்டதா, மாநகராட்சியால் கட்டபட்டதா அல்லது நிறைவேற்ற மனு மனுதாரரால் கட்டபட்டதா என்றால் எனக்குகு தெரியாது. தற்போது நிறைவேற்று மனு சொத்தில் எத்தனை கட்டிடம் உள்ளது என்றால் 5 கட்டிடங்கள் உள்ளது. அந்த 5 கட்டிடங்களும் யார் பெயரில் உள்ளது என்றால் மாநகராட்சியின் பெயரில் உள்ளது. 5 கட்டிடங்களும் மாநகராட்சி பெயரில் உள்ளதற்கு ஆவணங்கள் சமர்பி்த்துள்ளேனா என்றால் இல்லை.

எதன் அடிப்படையில் 5 கட்டிடங்கள் மாநகராட்சி பெயரில் உள்ளதாக கூறினேன் என்றால் வருவாய் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவி்ல்லை என்றால் சரி. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண். 863 ஆகும். வருவாய் துறை ஆவணங்களின் பழைய சர்வே எண் யார் பெயரில் உள்ளது என்றால் ஆசாரிபள்ளம் பஞ்சாயத்து பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள 10 ஆவணங்களிலும் பழைய சர்வே எண் 863

ஆசாரிபள்ளம் பஞ்சாயத்து பெயரில் இல்லை என்றால் சரி.

எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை மாநகராட்சிக்கு உரிமை கோருகிறேன் என்றால் அரசு புறம்போக்கு என்று ஆ பதிவேட்டிலும் புல வரைபடத்திலும் சொல்லப்பட்டுள்ளது. மாநகராட்சிக்கு அரசு வழக்க சொத்தை கொடுத்துள்ளார்களா என்றால் தெரியாது. நான் ஆவணங்களை பரிசீலனை செய்து நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனான என்றால் சரி. அவ்வாறு நான் பரிசீரிலனத்த ஆவணங்களில் மாநகராட்சிக்கு வழக்கு சொத்தை அரசு கொடுத்ததாக எதுவும் இல்லை என்றால் சரி.

வழக்கு சொத்தானது மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்பாக ஆசாரிபள்ளம் பஞ்சாயத்தில் இருந்தது என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டபடும் ஆவணமானது செயல் அலுவலரால் கொடுக்கப்பட்டட கட்டிட வரி விதிப்பு பதிவேட்டின் உண்மை நகல் என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்டும் ஆவண்ங்கள் வழக்கு சொத்திற்கு கட்டிட வரி செலுத்தியதற்காக ஆசாரிபள்ளம் பஞ்சாயத்தால் கொடுக்ப்பட்ட ரசீதுகள் என்றால் சரி. அது எ.சா.ஆ. 1 (8 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண் 1068/2004 வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் என்றால் சரி. அது ஏ.ம.சா.ஆ.2 ஆகும். அதில் 12 வது பக்கத்தில் மாநகராட்சியின் நிர்வாக அதிகாரி 2 வது சாட்சியாக விசாரிக்கபட்டது என்றால் சரி. பஞ்சாயத்து ஆவணங்கள் அனைத்தும் மாநகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்பந்தமாக பஞ்சாயத்து ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

தற்போது என்னிடம் காட்டப்டும் ஆவணம் வீட்டு வரி ரசீதுகள் மாநகராட்சியால் வழக்க பட்டிகை சொத்திற்காக வழங்கட்பட்டது என்றால் சரி. எ,ம.சா.ஆ.3 (எண்ணம் 4) ஆகும். எந்த ஆண்டு எந்த தேதி எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை ஆக்கிரமித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில்

ஆக்கிரமிப்பாளர் என்று எதிர்மனுதாரரை கூறியுள்ளேன் என்றால் அரசு புறம்போக்கு என்று இருந்ததால் சொல்கிறேன். வழக்கு சம்மந்தமான பழைய வழக்கின் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 9 தீர்ப்பின் மீது மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. மேல்முறையீட்டு தீர்ப்பில் வழக்க சொத்து புறம்போக்கு சொத்து இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி, 2 ம் மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது என்னிடம் காட்டபடும் உத்தரவானது மேல்முறையீட்டிடன் உத்தரவு என்றால் சரி. எ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டு உத்தரவிற்கு எதிராக அரசு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது என்றால் சரி.

ம.சாஆ.6 என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ 7 என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. ம.சாஆ 3. ல் வழக்கு சொத்தில் உள்ள 3 கடைகளை குறிப்பிடபடவில்லை என்றால் சரி. மசா.ஆ 4 வரைபடத்தை யார் எப்போது தயார் செய்தார்கள் என்றால் வருவாய் துறையால் தயார் செய்யப்பட்டது எப்போது என்று எனக்கு தெரியாது. ம.சாஆ. 8 தீர்ப்பிற்கு பின் எதிர்மனுதாரரை ஆக்கிரமிப்பாளர் என்று கூறி நீதிமன்ற அவமதிப்பு செய்கீறிர்கள் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டபடும் ஆவணமானது வழக்கு பட்டிகை சொத்தை நீதிமன்றத்தால் நிறைவேற்று மனு மூலம் எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்டும் ஆவணமானது நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வரைபடம் என்றால் சரி. மேற்படி 2 ஆவணங்களும் எ.வா, சா,ஆ 5,6 ஆகும் .

அசல் வழக்கு எண் 56/2014 தீர்ப்பில் அரசாணை எண் 248 தேதி 15.05.2000 ல் விவரங்களை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அரசு புறம்போக்கு என்று பட்டா கொடுக்கமுடியாது. பட்டா கொடுக்கமுடியாது என்பதற்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். அரசாணை எண் 248 ஐ இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வழக்கு சொத்து 23.05 ஏர் வீஸ்தீரணம் என்று சொல்லியுள்ளது . அதை நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கபட்ட பின்பும் வழக்கு சொத்தை அரசு புறம்போக்கு என்று

சொல்வது ஏற்புடையதக்கது அல்ல என்றால் சரியல்ல வழக்கு சொத்தில் பொதுமக்களுக்கு உபயோகமாக கட்டிடங்கள் எதுவும் இல்லை என்றாலும் எதிமனுதார்கள் கட்டிடம் உள்ளது என்றாலும் சரியல்ல.

வழக்கு சொத்தில் என்ன கட்டிடம் உள்ளது என்றால் வெல்டிங், ேஹாட்டல் மற்றம் 2 காலி இடம் உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடங்கள் மாநகராட்சி அல்லது பஞ்சாயத்தின் கட்டுபாட்டில் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தை நாங்கள் நிர்வகித்து வருவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாதவ நாயர் 4 சென்ட் இடத்தை 1968 ல் பஞ்சாயத்திற்கு இஷ்டதானம் கொடுத்துள்ளார் என்றால் சரி. அந்த 4 சென்ட் சொத்து வழக்கு சொத்தின் எந்த இடம் என்றால் எனக்கு தெரியாது.

இஷ்டதான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிர்மனதார்ர்கள் 08.01.1988 ல் வழக்கு சொத்தை கிரயம் செய்துள்ளார்கள் என்றால் சரி. மாதவன் நாயர் கொடுத்த 4 சென்ட் போக மீதம் எவ்வளவு இடம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. மாதவன் நாயர் அவரது மகள் பத்ம குமாரி தங்கச்சி கொடுத்த கிரய பத்திரத்தில் என்ன தவறு உள்ளது என்றால் சர்வே எண் தவறாக உள்ளது. அந்த கிரய பத்திரத்தில் சொல்லப்பட்ட எல்கைகளும் இந்ந மனு சொத்தின் எல்கைகளும் ஒன்று என்றால் சரி.

நஷ்ட ஈடு பெறாமல் விட்டுகொடுத்ததாக சொல்லியிருப்பதற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொன்னேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் உள்ள ரோடு எந்த ஆண்டு உருவாக்கப்பட்டடது என்றால் எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் 6 பக்கத்தில் கடைசி வரியில் தொடங்கி 7 பக்கத்தில் சொல்லியுள்ள வழக்கு சொத்தின் விவரங்கள் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. மாதவன் நாயர் தாசில்தாரராக வேலை பார்த்ததற்கு ஆவணங்கள் எதாவது பார்த்தேனா என்றால் இல்லை.

4ம் பிரதிவாதி வாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு ஒருதலை பட்ச உத்தரவை வாதிகள் பெறுவதற்கு உதவி புரிவதில் சொல்லியுள்ளதில் 4ம் பிரதிவாதி யார் என்றால் தாசில்தார் ஆவார். அவ்வாறு செயல்பட்டதற்கு தாசில்தார் மீது உரிய நடடவடிக்கை எடுக்க உரிய

அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளோமா என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்க எ்ண் 1745/1984 எதன் அடிப்படையில் ஒருதலை பட்ச தீர்ப்பு என்று சொல்லியள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்க எண் 1068/2004 மற்றும் 1116/2004 ஆகிய வழக்குகள் இந்த வழக்கின் கருப்பொருளுக்கும் சம்மந்தம் இல்லை என்று எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். எந்த ஆவணம் என்றால் தீர்ப்புரையின் ஆவணம் . உண்மையில் அவ்வாறு தீர்ப்புரையில் சொல்லப்படவில்லை என்றாலலும் நான் வழக்கிற்காக சொன்னேன் என்றாலும் சரியல்ல. மேற்படி 2 வழக்குகள் 1068/2004, 1116/2004 இந்த வழக்கின் பட்டிகை சொத்திற்கு சம்மந்தமுடையது என்றால் சரி. வழக்கு சொத்தின் இடத்திலிருந்து ஆசாரிபள்ளம் பஞ்சாயத்து அலுவலகம் எவ்வளவு துரம் என்றால் சுமார் 50 அடி இருக்கும். எதிர்மனுதார்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்று வழக்கிற்காக பொய்யாகசொல்கிறேன் என்றாலும் வாதிகளும் அவர்களது முன்ஜென்மிகளையும் ஆக்கிரமிப்பாளர்கள் என்றாலும் சரி.

ஆக்கிரமிப்பாளர்கள் என்பதற்கு நடிவடி்க்கை எடுக்க யாருக்க அதிகாரம் உள்ளது என்றால் அரசுக்கு உள்ள்து மாநகராட்சிக்கு இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதார்கள் அரசு புறம்போக்கை ஆக்கிரமித்தாக சொல்லி அரசாங்கம் இதுவரை எந்ந நடவடிக்ை கயும் எடுக்கவில்லை என்றால் சரி. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடம் பொது கட்டிடமா தனியார் கட்டிடம் என்றால் தனியார் கட்டிடம் ஆகும். அதனால் நகர மாநகராட்சி சட்டம் மற்றும் பொதுகட்டிட சட்டம் இந்த வழக்கு சொததிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. பட்டா பாஸ் புத்தம் சட்டம் பிரிவு 14 இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரி. வாதிகள் மாவட்ட ஆட்சி தலைவருக்கோ தாசில்தாருக்கோ உரிய மனு அ னுப்பி அவர்கள் தக்க நடிவடிக்கை எடுக்காததால் அசல் வழக்க எண் 56/2014 தாக்கல் செய்யப்பட்டடது என்றால் சரி.

எனது நிருபண வாக்குமூலத்தில் பக்கம் 9 ல் 3 வது பாராவில் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். வழக்கு சொத்தானது நீதிமன்றதால் வாதிகளுக்கு விளம்புகை செய்யப்பட்டு அதன் பின்பு நீதிமன்றம மூலம் கைவசம் மூலம் எடுக்கப்பபட்ட சொத்து என்றால் சரி. அப்படிப்பட்ட சொசததில் எந்த விதமான கோரிக்கையும் வைக்கமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்குரிய அனைத்து ஆவணங்கையையும் தாக்கல் செய்யாமல் இந்த நீதின்றத்தை தவறாக வழிநடத்த இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிய்லல. எற்கேனவே பிறப்பிக்கப்பட்ட அனைத்து வழக்ககுகளின் தீர்ப்புகளையும் எதிர்த்து ஆட்சேபனை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

பழைய சர்வே எண்கள் 863 ல் புதிய சர்வே எண் 866/1 , 577/8 ஆகும். வழக்கு சொத்தானது ஆசாரிபள்ளம் பஞ்சாயத்திற்கோ அல்லது நாகர்கோவில் மாநகராட்சிக்கு பாத்தியம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யாததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. ஆசாரிபள்ளம் பஞ்சாயத்திலும் மாநகராட்சியிலும் வழக்கு சொத்திற்கு வாதிகள் பெயருக்கு ரசீதுகள் எற்படுத்தி கொடுத்ததால் வாதிகளின் உரிமையை ஒப்புகொண்டு தெரிந்துள்ளது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கானது முரண்தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த மனு தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் தனி வழக்காக தாக்கல் செய்யாமல் இந்த மனு தாக்கல் செய்துள்ள்து ஏற்புடையதல்லது என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் சாட்சியம் அளிக்க சரியான நபர் இல்ல என்றால் சரியல்ல.